DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.9

Name : **திரு.ஜோஸ்**

Caste:

Father's Name :**திரு.**

Calling :

Village:

Religion :

Taluk :

Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 20.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் சுப்புராஜ் நகர், போடியில் குடியிருந்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எனக்கு இறந்து போன அபிபுல்லா ஏற்கனவே பரிச்சயம் கிடையாது. கடந்த 26.02.2025 ஆம் தேதியன்று நானும், அமானுல்லா என்பவரும் இருவரும் நடை பயிற்சி சென்று கொண்டிருந்தோம், அப்போது காலை 08.00 மணி இருக்கும். அப்போது போடி நகர காவல் ஆய்வாளர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 1ம் எதிரியான அனீஸ் பாத்திமா என்பவரை கைது செய்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது நான் ஆய்வாளரை அணுகி என்ன விபரம் என்று கேட்டேன். அப்போது அவர் ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக எதிரியை கைது செய்திருப்பதாகவும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க உள்ளார் என்றும், என்னையும், அமானுல்லாவையும் சாட்சியாக இருக்கச் சொல்லி கேட்டுக் கொண்டார்கள்.

2. எங்கள் முன்னிலையில் காலை 8.10 மணியளவில் துணை ஆய்வாளர் அவர்கள் முன்னிலையில் முதலில் எதிரி அனீஸ் பாத்திமாவை போலீசார் விசாரணை செய்து அவர் சொன்ன வாக்குமூலத்தை லேப்டாப்பில் பதிவு செய்தார்கள் அவ்வாறு அவர் கொடுத்த வாக்குமூலத்தை எங்கள்

முன்னிலையில் பதிவு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து அவர் ஒப்புக் கொண்டு கையெழுத்து போட்டார். அதன் பிறகு 2–ம் எதிரி ஜெயபாண்டி என்பவரை போலீசார் அதே இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் விசாரணை செய்தார். அவரும் கொடுத்த வாக்குமூலத்தை அதே லேப்டாப்பில் பதிவு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து எங்கள் முன்னிலையில் அவரிடம் கையெழுத்து வாங்கினார்கள், நாங்களும் சாட்சி கையெழுத்து போட்டோம். அவ்வாறு இருவரும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகளும் நாங்களும் கையெழுத்து போட்டோம் எங்களுடைய கையெழுத்துகள் அ.சா.ஆ.12, 13. ஆய்வாளர் இது தொடர்பாக என்னை விசாரணை செய்தார்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை, சாட்சி விசாரணை 04.11.2025–ம் தேதியன்று உத்தரவிடப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் அவகாசம் வழங்கப்படும் இன்று எதிரிகள் தரப்பு வழக்கு ஆஜரில்லை என்பதால் என்பதால் இலவச சட்ட உதவி மையத்திலிருந்து இலவச சட்ட உதவி வழக்கறிஞரை (LADCS) எதிரிகளுக்கு நியமிக்கப்பட்டு <u>இலவச சட்ட உதவி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)</u>**

1. நான் போடி, சுப்புராஜ் நகரில் குடியிருந்து வருகிறேன். சுப்புராஜ் நகர் என்பது பெரிய நகர் பகுதி என்றால் சரியல்ல, அது தெரு தான். நான் குடியிருந்து வரும் 11–வது தெருவிற்கும் ஓம் சக்தி கோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். ஓம் சக்தி கோயில் பகுதி என்பது பொதுமக்கள் குடியிருக்கும் பகுதி என்றால் சரிதான். அந்த நேரத்தில் எதற்காக நான் அங்கு சென்றேன் என்றால் நடை பயிற்சி செல்வதற்காக காலையில் நானும் எனது நண்பர் அமானுல்லாவும் சென்றோம். சம்பவ இடத்திலேயே போலீசார் என்னை விசாரணை செய்து எனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். அனிஸ் பாத்திமா வீட்டு அருகில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். ஓம் சக்தி கோயில் அருகில் தான் எதிரிகளின் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் குடியிருப்பது 11–வது தெரு எதிரிகள்

அரை கிலோமீட்டர் தள்ளி குடியிருந்து வருகிறார்கள் என்றும், அவர்கள் குடியிருக்கும் பகுதியே பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதி என்றும், அவ்வாறு இருக்கும் பட்சத்தில் என்னை சாட்சியாக போட வேண்டிய அவசியம் கிடையாது என்றால் சரியல்ல. அங்கு சாட்சிகளை போலீசார் அழைத்தார்கள் அவர்கள் யாரும் சாட்சியாக வருவதற்கு முன் வரவில்லை என்பதால் போலீசார் எங்களை அழைத்தார்கள்.

2. நான் காவல்துறையினரின் கையிருப்பு சாட்சி என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும், என் முன்னிலையில் அவர்கள் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதன் பெயரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நான் வாக்கிங் செல்வதற்காக அந்த இடத்திற்கு வந்தேன் என்ற விவரத்தை போலீசார் என்னை விசாரணை செய்யும்போது சொல்லி உள்ளேன்.

<u>**மறுவிசாரணை – இல்லை**</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.20 15:55:44 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.